DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. .. | **CC. 287 /2020** | | |
| Miscellaneous | .. .. | | | |
| Preliminary Register | .. .. | | | |
| Sessions | .. .. | | | |
| Deposition of Witness for | | PW 1<br>Prosecution<br>Court | | |
| Name | : | **திரு.மூர்த்தி** | Caste | : |
| Father/Husband Name | : | த.பெ கணேசன் | Calling | : |
| Village | : | | Religion | : |
| Taluk | : | | Age | : 26 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20

நாள் - 17.05.2022

**சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது. முதல் விசாரணை**

துவக்க நேரம் 03.43

நான் முல்லை வாடியில் உள்ள இளங்கோ தெருவில் வசித்து வருகிறேன். நான் சொந்தமாக லாரி வைத்து வேலை செய்துவருகிறேன். TN 29 AX0789 என்ற பதிவு எண் கொண்ட Asok Ley land தாரஸ் லாரி சொந்தமாக வைத்து வேலை செய்து வந்தேன். நான் எப்பவும் வேலை செய்துவிட்டு லாரியை கொண்டு வந்து உப்பு ஓடை அருகில் உள்ள LRC திருமணமண்டபம் முன்பு லாரியை நிறுத்துவேன். அதே போல் கடந்த 05.09.2020 அன்று லோடிற்கு சென்றுவிட்டு லாரியை மதியம் 2 மணியளவில் LRC திருமண மண்டபம் முன்பு நிறுத்திவிட்டு வீட்டிற்கு சென்றுவிட்டேன். மறுநாள் எனக்கு லோடு இல்லை அதனால் மறுநாள் காலை, மாலை, இரவு மூன்று வேலையும் லாரியை பார்த்துவிட்டு செல்வேன். 07.09.2020 அன்று காலை 7 மணிக்கு வந்து பார்த்தபோது நான் நிறுத்தி இருந்த இடத்தில் லாரி இல்லை. பக்கத்தில் இருந்த மிச்சர் கடையில் விசாரித்தேன். பின்பு அக்கம் பக்கம் இருந்தவர்களிடம் விசாரித்தேன். யார் எடுத்துசென்றார்கள் எப்படி காணவில்லை என தெரிவில்லை என சொன்னார்கள். மேலும் எனக்கு தெரிந்த சுற்றுவட்டார பகுதியில் சென்று லாரியை தேடி பார்த்தேன். அங்கும் காணவில்லை 08.09.2020 காலை சுமார் 8 மணியளவில் ஆத்தூர் நகர காவல் நிலையத்திற்கு சென்றேன். காணாமல் போன எனது லாரியை கண்டுபிடித்து தரசொல்லி புகார் மனுகொடுத்தேன். என்னிடம் காட்டபபடும்

புகார் மனு நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து அந்த **புகார் மனு அ.சா.ஆ 1 ஆகும்.** இரண்டு நாட்கள் கழித்து காவல் நிலையத்தில் இருந்து போலீஸ்சார் எனக்கு போன் செய்து காணாமல் போன லாரி கிடைத்துவிட்டதாகவும் ராசிபுரத்தில் இருப்பதாகவும் வந்து அடையாளம் காட்டச்சொல்லி சொன்னார்கள். நானும் சென்று எனது லாரியின் இரண்டு பக்கத்தில் உள்ள பதிவுஎண்ணைப்பார்த்து அடையாளம் காட்டினேன். பின்பு என வானகம் எவ்வாறு திருடு போனது யார் திருடிசென்றார்கள் என்று கேட்ட்போது ராசிபுரத்தில் உள்ள பள்ளிகூடம் முன்பு நான்கு நபர்களை உட்கார வைத்திருந்தார்கள் அந்த நான்கு நபர்கள்தான் எனது லாரியை திருடிச்சென்றதாக விசாரணையில் தெரியவந்ததாக போலீசார் சொன்னார்கள். அந்த நபர்களை தற்போது பார்த்தால் என்னால் அடையாளம் காண்பிக்க முடியாது. ஒரே முறைதான் பார்த்தேன் அதனால் ஞாபகம் இல்லை. மேற்படி எனது வாகனத்தை நான் நீதிமன்றத்தில் மன செய்து பெற்றுகொண்டேன். அந்த வாகனத்தை நான் நீதிமன்றம் தற்போது எடுத்து வந்துள்ளேன். புகைப்படத்தில் உள்ள லாரிதான் நான் திருப்பிச்சென்ற லாரி ஆகும். **லாரி சா.பொ.1 ஆகும்.** வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

லாரி தொலைந்துவிட்டது என்று பல இடங்களில் தேடி கிடைக்கவில்லை என்றதால் ஆத்தூர் நகர காவல் நிலையத்தில் புகார் செய்தேன் என்றால் சரிதான். புகார் செய்தபோது வண்டியின் RC புக்கையும் சேர்த்து கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த புகாரில் வாகத்தல் இன்ஜின் எண் Chase எண் ஆகியவற்றை எழுதிகொடுத்தேன் என்றால் சரிதான். அந்த புகாரிலும், போலீஸ் விசாரணையிலும் எனது லாரியை LRC திருமணமண்டபத்திற்கு முன்பு நிறுத்திவிட்டு சென்றாதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது புகாரிலும், போலீசாரிடமும் மதியம் இரண்டு மணிக்கு நிறுத்திவிட்டு சென்றதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இரண்டு நாட்களில் போலீஸ் போன் செய்து வண்டி கிடைத்து விட்டதாக கூறினார்கள். என்னை போலீசார் காவல் நிலையத்தில் வைத்து ஒரு முறை விசாரித்தார்கள் என்றால் சரிதான். நான் ராசிபுரம் காவல் நிலையம் சென்று எனது வண்டியை அடையாளம் காண்பித்துவிட்டு வந்துவிட்டேன் என்றால் சரிதான். நான் சொன்னவாறு சொன்ன தேதி மற்றும் நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும். புள்ளிவிவர கணக்கிற்காக போலீசார் கொடுத்த பொய்யான வழகிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

முடிவு நேரம் 04.00

ஒம்/-S.முனுசாமி,
நீதித்துறை நடுவர் எண்.1,
ஆத்தூர்.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. .. **CC. 287 /2020** | | | |
| Miscellaneous | .. .. | | | |
| Preliminary Register | .. .. | | | |
| Sessions | .. .. | | | |
| Deposition of Witness for | PW 2<br>Prosecution<br>Court | | | |
| Name | **திரு.கணேசன்** | Caste | : | |
| Father/Husband Name | : த.பெ செல்லமுத் | Calling | : | |
| Village | : | Religion | : | |
| Taluk | : | Age | : | 26 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20

நாள் - 17.05.2022

**சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது. முதல் விசாரணை**

துவக்க நேரம் 04.01

நான் தற்சமயம் முல்லைவாடி இளங்கோ தெருவில் வசித்து வருகிறேன். நான் மளிகைகடையில் வேலை செய்து வருகிறேன். அ.சா1 எனது மகன் ஆவார். எனது மகன் மூர்த்தி லாரி டிரைவராக வேலை செய்து வருகிறார். எங்களுக்கு சொந்தமாக TN 79 AX 0789 என்ற AshoK Ley land தாரஸ் லாரி உள்ளது அந்த லாரியை எனது சின்ன மகன்தான் வசித்து வருகிறார். 06.09.2020 அன்று எனது மகன் வழக்கம் போல் நிறுத்தும் உப்புஓடை அருகில் உள்ள LRC திருமணமண்டபம் முன்பு நிறுத்தி இருந்தார். மறுநாள் லாரியை யாரோ திருடிசென்றுவிட்டதாக 10 நாட்கள் கழித்துதான் லாரி திருடுபோன விஷயம் எனக்கு தெரியும். பின்பு திருடுபோன லாரி கிடைத்துவிட்டதாக எனக்கு எனது மகன் சொன்னார் வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

வண்டி திருடுபோன சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல.

முடிவு நேரம் 04.06

ஒம்/-S.முனுசாமி,
நீதித்துறை நடுவர் எண்.1,
ஆத்தூர்.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Calendar | .. .. **CC. 287 /2020** | | | | |
| Miscellaneous | .. .. | | | | |
| Preliminary Register | .. .. | | | | |
| Sessions | .. .. | | | | |
| Deposition of Witness for | PW 3 | | | | |
| | Prosecution | | | | |
| | Court | | | | |
| Name | **திரு.முனியன்** | | Caste | : | |
| Father/Husband Name | : | த.பெ ஜெயபால் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | 26 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20

நாள் - 17.05.2022

**சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது. முதல் விசாரணை**

துவக்க நேரம் 04.39

நான் தற்சமயம் ஆத்தூர் கோட்டையில் உள்ள அம்மன் நகரில் வசித்து வருகிறேன். LRC திருமணமண்டபம் அருகில் பஞ்சர் கடை வைத்து வேலை செய்து வருகேிறன். அ.சா 1 மூர்த்தி என்பரின் லாரி LRC திருமணமண்டபம் முன்பு நிறுத்திவிட்டு போக வர பழக்கம். தேதி மாதம் ஞாபம் இல்லை 2020 ம் வருடம் ஒரு நாள் நான் எனது கடையை திறந்து வேலை செய்து இருந்தேன். அசா,1 மூர்த்தி LRC திருமண மண்டபம் முன்பு அவரது லாரியை நிறுத்திவிட்டு போயிருந்தார். மறுநாள் காலை வந்து பார்த்தபோது லாரி திருடுபோய்விட்டது என்று சொன்னார். என்னிடம் லாரி குறித்து கேட்டார் யார் திருடி சென்றார் என்று தெரியாத என்று சொன்னேன். மேலும் அவர் பல இடங்களில் தேடி பார்து அவரது லாரி கிடைக்கவில்லை என்று சொன்னார். பின்பு காவல் நிலையத்தில் புகார் அளித்ததாக சொன்னார். வழக்கு சம்பமந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

சம்பவம் குறித்து எனக்கு நேரில் தெரியாது அ.சா1 சொல்லிதான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரித்துவிட்டு கையெழுத்து

வாங்கிக்கொண்டார்கள். அசா1 எனக்கு வேண்டப்பட்டவர் என்பவதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

முடிவு நேரம் 04.45.

ஒம்/-S.முனுசாமி,
நீதித்துறை நடுவர் எண்.1,
ஆத்தூர்.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. **CC. 287 /2020** | | |
| Miscellaneous | .. .. | | |
| Preliminary Register | .. .. | | |
| Sessions | .. .. | | |
| Deposition of Witness for | PW 4<br>Prosecution<br>Court | | |
| Name | **திரு.வெங்கடேசன்** | Caste | : |
| Father/Husband Name | : த.பெ முனுசாமி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20

நாள் - 17.05.2022

**சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது. முதல் விசாரணை**

துவக்க நேரம் 04.45

நான் தற்சமயம் முல்லைவாடி அவ்வையார் தெருவில் வசித்துவருகிறேன். நான் சொந்தமாக லாரி வைத்து ஓட்டி வருகிறேன். அ.சா1 ஐ எனக்கு தெரியும். அ.சா 1 அவருக்கு சொந்தமான லாரியை LRC திருமண மண்டபம் நிறுத்திவிட்டு செல்வது வழக்கம் அதே போல் கடந்த 06.09.2020 அன்று அ.சா1 அவருக்கு சொந்தமாக TN 29 AX 0789 என்ற பதிவு எண் கொண்ட தாரஸ் லாரியை LRC திருமண மண்டபம் முன்பு நிறுத்திவிட்டு வீட்டிற்கு சென்றார். மறுநாள் 07.09.2020 அன்று காலை லாரியை பார்க்க சென்றபோது அ.சா1 ன் லாரியை காணவில்லை என்றும் லாரியை பற்றி அக்கம் பக்கம் விசாரித்தார். அவருடன் நானும் சென்று பல இடங்களில் விசாரித்தோம். லாரியை யார் திருடிசென்றார்கள் என்று தெரியவில்லை. அது சம்பந்தமாக அ-சா1 கால் நிலையத்தில் புகார் மனு கொடுத்தார் பின்பு 2 நாட்கள் போலீசார் வந்து சம்பவ இடத்தை பார்யிட்டு பார்வை மகஜர் தயார் செய்தார்கள். அதில் நானும் மகாமணி என்பவரும் சாட்சியாக கையெழுதது செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். பார்வை மகஜர் அ.சா.ஆ 2 ஆகும்.

வழக்கு சம்பமந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

சம்பவம் குறித்து எனக்கு நேரில் தெரியாது அ.சா1 சொல்லிதான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் கையெழுத்திட்ட பேப்பரில் உள்ள விவரம் எனக்கு தெரியும். அதில் லாரி காணாமல் போனது குறித்து வரைபடம் எழுதினார்கள். அசா1 எனக்கு வேண்டப்பட்டவர் என்றால் சரியல்ல. எழுதப்படடாத வெள்ளைப்பேப்பரில் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல.

முடிவு நேரம் 04.53

ஒம்/-S.முனுசாமி,
நீதித்துறை நடுவர் எண்.1,
ஆத்தூர்.